Tamil Murasu, page 3, Monday, 12 Aug 2024

# சுற்றுப்புற நலனுக்கான நிதி அறிவில் தேர்ந்த சூரியா

கி. ஜனார்த்தனன்

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த மாணவர் எனும் பெருமையுடன் இளநிலைப் பட்டத்தைப் பெற்றுள்ளார் சி.எம்.ஆர் .சூரியா.

சமூக சேவையிலும் நீடித்த நிலைத்தன்மை நிதித்துறையிலும் (sustainable finance) உள்ள ஆர்வம் தொடர்ந்து நீடிக்கும் என்று கூறினார் தற்போது எச்எஸ்பிசி வங்கியில் பணியாற்றும் சூரியா.

"நிலைத்தன்மை நிதித்துறை என்பது சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் முதலீட்டு முறைமையைக் குறிப்பதாகும். இதனைப் பற்றி அறிய என் பணித்திட்ட அனுபவங்கள் பெரிதும் உதவின," என்று சூரியா குறிப்பிட்டார்.

தமது ஆர்வங்களைக் கண்டறிந்து, அத்துறையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார் அவர்.

முன்னதாக தெமாசெக் பலதுறை தொழிற்கல்லூரியில் சட்ட, நிர்வாகத் துறையில் படித்தபோது சட்ட வகுப்புகளில் நன்கு தேர்ச்சி அடைந்தார்.

அதே நேரத்தில், அந்தப் பாடத்திடத்தில் இடம்பெற்றிருந்த வர்த்தக பாடங்களில் அவரது ஆர்வம் அதிகரித்தது. எனவே, அத்துறையில் மேற்படிப்பை சூரியா மேற்கொண்டார்.




ஆகஸ்ட் 2ஆம் தேதியன்று மாணவர்கள் முன் உரையாற்றும் வர்த்தக, கணக்காய்வு மாணவர் சி. எம். ஆர் சூரியா.
**படம்: நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்**

இளநிலைப் பட்டப்படிப்பில் உச்சபட்ச மதிப்பெண்களைப் பெற்றதுடன் கோல்மண்ட் சேக்ஸ், எஸ்ஜிஎக்ஸ் ரெக்கோ உள்ளிட்ட ஐந்து மதிப்புமிக்க நிதி அமைப்புகளின் பணித்திட்டங்களையும் சூரியா மேற்கொண்டுள்ளார்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சமூகநல மன்றத்தின் வளர்ச்சி, வாய்ப்புக்கான பிரிவின் துணைத்தலைவராக இருந்த சூரியா, பல்கலைக்கழக அளவிலும் தேச அளவிலும் செயல்படும் திட்டங்களை வகுத்து நடத்தும் 60க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை வழிநடத்தினார்.

தலைசிறந்த மாணவராக ஆசிரியர்களாலும் சக மாணவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது குறித்து மகிழ்வதாகக் குறிப்பிட்ட சூரியா, மாணவப் பருவத்தில் புதிய முயற்சிகளைத் துணிவுடன் மேற்கொள்ளும்படி பல்கலைக்கழக மாணவர்களை ஊக்குவிக்கிறார்.

janark@sph.com.sg